இலங்கை மக்களுக்கு தமிழகம் அனுப்பிய நிவாரண பொருட்களின் வினியோகம் துவக்கம்

கொழும்பு, மே.30

இலங்கை மக்களுக்கு தமிழகத்தில் இருந்து அனுப்பப்பட்ட நிவாரண பொருட்களை வினியோகிக்கும் பணிகள் தொடங்கியது.

பொருளாதார நெருக்கடியில் இருந்து மக்களை பாதுகாப்பதற்கு உலக நாடுகளின் ஆதரவை இலங்கை எதிர்பார்த்து இருக்கிறது.

இந்தியாவின் உதவும் நடவடிக்கைகளில் தமிழகமும் தனது பங்களிப்பை வழங்கி வருகிறது. முதற்கட்டமாக 9 ஆயிரம் டன் அரிசி, 200 டன் பால்பவுடர் மற்றும் 24 டன் அத்தியாவசிய மருந்து பொருட்கள் என ரூ.45 கோடி மதிப்பிலான பொருட்களை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடந்த 18ந்தேதி இலங்கைக்கு அனுப்பி வைத்தார்.

இந்த பொருட்கள் கப்பல் மூலம் கடந்த வாரம் கொழும்பு சென்றடைந்தன.

இந்த பொருட்களை இலங்கை மக்களுக்கு வினியோகிக்கும் பணிகள் தற்போது தொடங்கி உள்ளன. தமிழகத்தில் இருந்து அனுப்பப்பட்ட அரிசி, 10 கிலோ பைகளில் அடைத்து மொத்தமுள்ள 25 மாவட்டங்களுக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது. பால் பவுடர் மற்றும் மருந்து பொருட்களும் அத்துடன் வழங்கப்படுகிறது.

இந்த பொருட்கள், குறைந்த வருவாய் கொண்ட குடும்பங்களுக்கு வழங்கப்பட்டு வருவதாகவும், அரசுக்கு எதிரான போராட்டங்களால், பல பகுதிகளுக்கு ரெயில் மூலம் அனுப்பி வைக்கப்படுவதாகவும் உணவு கமிஷனர் ஜே.பி. கிருஷ்ணமூர்த்தி தெரிவித்தார்.

மாநிலங்களவை தேர்தலுக்கான பாரதீய ஜனதா வேட்பாளர் பட்டியல் வெளியீடு

கர்நாடகாவில் நிர்மலா சீதாராமன், மராட்டியத்தில் பியூஷ் போட்டி

புதுடெல்லி, மே.30

பல்வேறு மாநிலங்களில் நடைபெறும் மாநிலங்களவை எம்.பி. தேர்தலுக்கான பாரதீய ஜனதா வேட்பாளர் பட்டியல் நேற்று வெளியிடப்பட்டது.

பல்வேறு மாநிலங்களில் இருந்து மாநிலங்களவை உறுப்பினர்களாக இருந்த 57 எம்.பி.க்களின் பதவிக்காலம் விரைவில் முடிவடைகிறது. இதில் மத்திய அமைச்சர்கள் நிர்மலா சீதாராமன், பியூஷ் கோயல் உள்ளிட்டோரும் அடங்குவர். காலியாகும் இந்த இடங்களுக்கு அடுத்த மாதம் (ஜூன்) 10ந்தேதி தேர்தல் நடக்கிறது. இந்த தேர்தலில் போட்டியிடும் 16 வேட்பாளர்கள் அடங்கிய பட்டியலை பாரதீய ஜனதா நேற்று வெளியிட்டது. இதில் 6 பேர் உத்தரபிரதேசத்தில் போட்டியிடுகின்றனர். இதில் தர்சனா சிங் மற்றும் சங்கீதா யாதவ் என்ற 2 பெண் வேட்பாளர்களும் அடங்குவர்.

வேட்பாளர் பட்டியலில் கர்நாடகா, மராட்டியம், பீகார் ஆகிய மாநிலங்களில் இருந்து தலா 2 பேரும் அடங்கியுள்ளனர்.

இதைத்தவிர மத்திய பிரதேசம், ராஜஸ்தான், உத்தரகாண்ட், அரியானா மாநிலங்களில் தலா ஒருவர் போட்டியிடுகின்றனர்.

இதில் முக்கியமாக நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் கர்நாடகாவில் இருந்தும், வர்த்தக அமைச்சர் பியூஷ் கோயல் மராட்டியத்தில் போட்டியிடுகிறார்கள்.

6 மாநகராட்சிகளுக்கு புதிய கமிஷனர்கள் நியமனம்

சென்னை, மே.30

தமிழகம் முழுவதும் 21 ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை இடமாற்றம் செய்தும், ஆவடி உள்ளிட்ட 6 மாநகராட்சிகளுக்கு புதிய கமிஷனர்களை நியமித்தும் தலைமை செயலாளர் வெ.இறையன்பு உத்தரவிட்டுள்ளார்.

இடமாற்றம் செய்யப்பட்டுள்ள ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் விவரம் வருமாறு:

★ நெல்லை மாநகராட்சி கமிஷனர் பி.விஷ்ணுசந்திரன், நகராட்சி நிர்வாக இணை கமிஷனராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

★ கடலூர் கூடுதல் கலெக்டர் (வருவாய்) ரஞ்சித்சிங் கால்நடை, பால்வளம், மீன்வளத்துறை துணை செயலாளராக மாற்றப்பட்டுள்ளார்.

★ கால்நடை, பால்வளம், மீன்வளத்துறை கூடுதல் செயலாளராக இருந்து வந்த விஜயலட்சுமி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுத்துறை கூடுதல் செயலாளராக பொறுப்பேற்கிறார்.

★ மதுரை மாநகராட்சி கமிஷனர் டாக்டர் கே.பி.கார்த்திகேயன், விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

★ தேனி பெரியகுளம் சப்கலெக்டர் சி.ஏ.ரிஷாப், நெல்லை மாவட்டம் சேரன்மகாதேவி சப்–கலெக்டராக பொறுப்பேற்கிறார்.

★ தர்மபுரி மாவட்ட கூட்டுறவு சர்க்கரை ஆலை நிர்வாக இயக்குனர் ஏ.சங்கர், கூட்டுறவு சங்கங்களின் கூடுதல் பதிவாளராக இடமாறுதல் செய்யப்பட்டுள்ளார்.

★ உயர்கல்வித்துறை இணை செயலாளர் எஸ்.பி.கார்த்திகா, சமூகநலன் மற்றும் பெண்கள் மேம்பாட்டுத்துறை கூடுதல் இயக்குனராக நியமிக்கப்பட்டுள்ளார்.

★ நாகர்கோவில் மாநகராட்சி கமிஷனர் ஆஷா அஜித், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனத்தின் நிர்வாக இயக்குனராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

★ இ–நிர்வாகத்தின் இணை இயக்குனர் எஸ்.பாலச்சந்தர், சேலம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கூடுதல் கலெக்டர் மற்றும் திட்ட அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

★ ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறையின் கூடுதல் இயக்குனர் எஸ். சரவணன், மதுரை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கூடுதல் கலெக்டர் மற்றும் திட்ட அதிகாரியாக பொறுப்பேற்கிறார்.

★ கூட்டுறவு சங்கங்களின் கூடுதல் பதிவாளர் எம்.அருணா, தமிழ்நாடு ஊரக புத்தாக்க திட்டத்தின் தலைமை செயல் அதிகாரியாக இடமாறுதல் செய்யப்பட்டுள்ளார்.

★ மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை இணை கமிஷனர் எம்.தங்கவேல், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வியல் மேம்பாட்டு வாரியத்தின் இணை மேலாண்மை இயக்குனர், திட்ட இயக்குனராக பொறுப்பேற்கிறார்.

★ ஊட்டி சிறப்பு பகுதி மேம்பாட்டு திட்டத்தின் திட்ட இயக்குனர் டாக்டர் மோனிகா ரானா, ஊட்டியில் உள்ள தமிழ்நாடு சிறு தேயிலை வளர்ப்போர் தொழில் கூட்டுறவு மற்றும் தேயிலை தொழிற்சாலைகள் கூட்டமைப்பின் (இன்ட்கோசர்வ்) மேலாண்மை இயக்குனராக முழு கூடுதல் பொறுப்புடன் நியமிக்கப்பட்டுள்ளார்.

★ சேலம் பட்டு வளர்ப்புத்துறை இயக்குனராக இருந்து வரும் கே.சாந்தி, சேலம் ஸ்டார்ச் மற்றும் சவ்வரிசி உற்பத்தியாளர்கள் சேவை தொழிற்கூட்டுறவு சங்கத்தின் (சாகோசர்வ்) நிர்வாக இயக்குனராக முழு கூடுதல் பொறுப்புடன் நியமிக்கப்பட்டுள்ளார்.

★ பெருநகர சென்னை மாநகராட்சி வட்டார துணை கமிஷனர் (தெற்கு) சிம்ரன்ஜீத்சிங் காலொன், மதுரை மாநகராட்சி கமிஷனராக பொறுப்பேற்கிறார்.

★ திருவண்ணாமலை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கூடுதல் கலெக்டர், திட்ட அதிகாரி எம்.பிரதாப், கோவை மாநகராட்சி கமிஷனராக நியமிக்கப்பட்டுள்ளார்.

★ தர்மபுரி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கூடுதல் கலெக்டர், திட்ட அதிகாரி ஆர்.வைத்திநாதன், திருச்சி மாநகராட்சி கமிஷனராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

★ தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வியில் மேம்பாட்டு வாரியத்தின் இணை மேலாண்மை இயக்குனர், திட்ட இயக்குனர் வி.சிவகிருஷ்ணமூர்த்தி நெல்லை மாநகராட்சி கமிஷனராக பொறுப்பேற்கிறார்.

★ கோவை வணிக வரிகள் துறை இணை கமிஷனர் (மாநில வரிகள்) ஆனந்த்மோகன், நாகர்கோவில் மாநகராட்சி கமிஷனராக நியமிக்கப்பட்டுள்ளார்.

★ மாநில இணை நெறிமுறை (புரோட்டாகால்) அதிகாரியாக இருந்த தர்பகராஜ், ஆவடி மாநகராட்சி கமிஷனராக பொறுப்பேற்கிறார்.

★ கோவை மாநகராட்சி கமிஷனர் ராஜகோபால் சுங்காரா, சென்னை மெட்ரோபாலிட்டன் குடிநீர் வழங்கல் கழிவுநீர்அகற்றல்துறைநிர்வாகஇயக்குனராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

எம்பிஎஸ் லிமிடெட்

CIN: L22122TN1970PLC005795

பதிவு அலுவலகம்: RR டவர்ஸ் IV, 16/17, சூப்பர் A,
திரு–வி–க இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், கிண்டி, சென்னை–600 032, தமிழ்நாடு
Tel: 0120-4599754 Email ID: investors@mpslimited.com,
Website: www.mpslimited.com

52வது வருடாந்திர பொதுக்கூட்டத்திற்கான ("AGM") முன் பொது அறிவிப்பு

கம்பெனிகள் சட்டம் 2013ன் பொருந்தக்கூடிய விதிகள் மற்றும் எம்சிஏ வெளியிட்ட சுற்றறிக்கைகளுக்கு இணங்க, வருடாந்திர பொதுக்கூட்டத்தை கூட்டுவதற்காக விநியோகிக்கப்படும் வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளபடி வர்த்தகத்தை பரிவர்த்தனை செய்ய எம்பிஎஸ் லிமிடெட்("கம்பெனி")டின் **52வது வருடாந்திர பொதுக்கூட்டம் திங்கட்கிழமை, ஜூன் 27, 2022 அன்று இந்திய நேரப்படி காலை 11.30 மணிக்கு காணொளி காட்சி(VC)/பிற ஒலி ஒளி சாதனங்கள்** (OAVM) மூலமாக நடைபெறுகிறது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

டெபாசிட்டரிகளிடம் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்த உறுப்பினர்களுக்கு வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு மற்றும் ஆண்டறிக்கை ஆகியவை மின்னணு முறையில் அனுப்பி வைக்கப்படும். அறிவிப்பு மற்றும் ஆண்டறிக்கை ஆகியவை கம்பெனியின் இணையதளம் www.mpslimited.com, CDSL–ன் www.evotingindia.com மற்றும் ஸ்டாக் எக்சேஞ்சுகளின் இணையதளங்கள் www.bseindia.com மற்றும் www.nseindia.comல் உள்ளது என்பதை உறுப்பினர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

வருடாந்திர பொதுக் கூட்டம் மற்றும் டிவிடெண்ட் நோக்கத்திற்காக கம்பெனியின் உறுப்பினர்கள் பதிவேடு மற்றும் பங்கு மாற்று புத்தகங்கள் செவ்வாய்க்கிழமை, ஜூன் 21, 2022 முதல் திங்கட்கிழமை, ஜூன் 27, 2022 வரை (இரண்டு நாட்களும் சேர்த்து) மூடப்பட்டிருக்கும். இறுதி டிவிடெண்ட் வழங்குவதற்காக உறுப்பினர்களை தீர்மானிக்கும் கட் ஆப் தேதியாக திங்கட்கிழமை, ஜூன் 20, 2022–ஐ கம்பெனி நிர்ணயித்துள்ளது.

தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு வெள்ளிக்கிழமை, ஜூன் 24, 2022 அன்று காலை 09.00 மணிக்கு தொடங்கி ஞாயிற்றுக்கிழமை, ஜூன் 26, 2022 அன்று மாலை 05.00 மணிக்கு முடிவடைகிறது.

வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பை பெறவும் மற்றும் மின்னணு வாக்குப்பதிவிற்கான உள்நுழைவு சான்றுகளைப் பெறுவதற்கும் கம்பெனியில் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்யாத காகித வடிவத்தில் பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள், போலியோ எண், பங்குதாரர் பெயர், பங்கு சான்றிதழ் (முன் மற்றும் பின்பக்கம்), பான் மற்றும் ஆதார் (சுயசான்றளிக்கப்பட்ட நகல்) ஆகியவற்றுடன் கையொப்பமிடப்பட்ட கோரிக்கைக் கடிதத்தின் ஸ்கேன் செய்யப்பட்ட நகலை கம்பெனி/ஆர்டிஏ மின்னஞ்சல் முகவரி agm@cameoindia.comக்கு அனுப்பி தங்கள் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்யலாம். டிமேட் வடிவத்தில் பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள் தங்கள் மின்னஞ்சல் முகவரி மற்றும் மொபைல் எண்களை தங்கள் டெபாசிட்டரி பங்கேற்பாளரிடம் புதுப்பிக்கலாம்.

எலெக்ட்ரானிக் கிளியரிங் சர்வீஸ் (ECS) மூலமாகவோ அல்லது வேறு எந்த வழியிலோ, உறுப்பினர்கள் தங்கள் வங்கிக் கணக்குகளில் நேரடியாக டிவிடெண்ட் பெறுவதற்கான தங்கள் ஆணையை வழங்குவது குறித்து வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பில் விவரிக்கப்பட்டுள்ளது.

எம்பிஎஸ் லிமிடெட்டுக்காக
ஒப்பம்/–
சுனித் மல்ஹோத்ரா
(கம்பெனி செயலாளர் மற்றும் CFO)

இடம் : நொய்டா
தேதி : மே 27, 2022

தமிழகத்தில் நேற்று 77 பேருக்கு கொரோனா

சென்னை, மே.30

தமிழகத்தில் நேற்று புதிதாக 14 ஆயிரத்து 407 பேருக்கு கொரோனா பரிசோதனை செய்யப்பட்டது. இதில் ஆண்கள் 36 பேரும், பெண்கள் 41 பேரும் உள்பட 77 பேருக்கு புதிதாக கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதில் அதிகபட்சமாக செங்கல்பட்டில் 32 பேரும், சென்னையில் 30 பேரும் உள்பட 8 மாவட்டங்களில் மட்டும் தொற்று பாதிப்பு பதிவாகியுள்ளது. 30 மாவட்டங்களில் பாதிப்பு இல்லை.

மேலும் 11 மாவட்டங்கள் கொரோனாவே இல்லாத மாவட்டங்களாக உருவாகியுள்ளது.

தமிழகத்தில் 73வது நாளாக எந்த மாவட்டத்திலும் உயிரிழப்பு இல்லை. இதுவரை 38 ஆயிரத்து 25 பேர் கொரோனா தொற்றால் உயிரிழந்துள்ளனர். மேலும் நேற்றைய நிலவரப்படி 448 பேர் கொரோனா நோய்க்கு சிகிச்சை பெற்று வருகின்றனர். அதிகபட்சமாக சென்னையில் 234 பேரும், செங்கல்பட்டில் 113 பேரும் சிகிச்சையில் உள்ளனர். தமிழகத்தில் 32 பேர் மட்டுமே ஆஸ்பத்திரி சிகிச்சையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். 41 பேர் கொரோனா நோயில் இருந்து குணமடைந்து நேற்று 'டிஸ்சார்ஜ்' செய்யப்பட்டுள்ளனர். இதுவரை தமிழகத்தில் 34 லட்சத்து 16 ஆயிரத்து 814 பேர் பூரணமாக குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

ஓஸ்வல் மினரல்ஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம், 8/11, போலீஸ் ஸ்டேஷன் ரோடு பல்லாவரம், சென்னை–600 043.
CIN: L30006TN1996PLC035973; E-Mail: info@oswalminerals.com; Website: www.oswalminerals.com

31 மார்ச் 2022–ல் முடிந்த காலாண்டு மற்றும் ஆண்டுக்கான தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை முடிவுகள் சுருக்கம்
(ரூ. கோடியில் இபிஎஸ் நீங்கலாக)

வ. எண்	விவரங்கள்	முடிந்த காலாண்டு 31.03.2022	முடிந்த ஆண்டு 31.03.2022	முடிந்த ஆண்டு 31.03.2021
		தணிக்கையானது	தணிக்கையானது	தணிக்கையானது
1	செயல்பாடுகளிலிருந்து மொத்த வருமானம் (நிகரம்)	880.24	3298.87	1682.97
2	வரி, விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு முன் சாதாரண செயல்பாடுகளில் இருந்து நிகர லாபம்	21.38	66.15	8.01
3	வரி, விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின் நிகர லாபம்	15.54	49.04	5.79
	செலுத்தப்பட்ட சமபங்கு மூலதனம் (முக மதிப்பு ஒவ்வொன்றும் ரூ.10/–)	7.55	7.55	7.55
	ஒரு பங்கு சம்பாத்தியம் (EPS)			
i)	அசாதாரண அயிட்டங்களுக்கு முன் ஒரு பங்கு சம்பாத்தியம் அடிப்படை மற்றும் டைலூட்டட் (வருடாந்திரம் அல்ல)	0.21	64.95	7.67
ii)	அசாதாரண அயிட்டங்களுக்கு பின் ஒரு பங்கு சம்பாத்தியம் அடிப்படை மற்றும் டைலூட்டட் (வருடாந்திரம் அல்ல)	0.21	64.95	7.67

குறிப்புகள்:
1. 31 மார்ச், 2022–ல் முடிந்த காலாண்டு மற்றும் ஆண்டுக்கான மேற்கண்ட தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை முடிவுகள் 28 மே 2022 அன்று நடைபெற்ற கூட்டத்தில் தணிக்கைக் குழுவால் மதிப்பாய்வு செய்யப்பட்டது. 31 மார்ச், 2022–ல் முடிந்த ஆண்டுக்கான மேற்கண்ட நிதிநிலை முடிவுகள் சட்ட தணிக்கையாளர்களால் தணிக்கை செய்யப்பட்டது. அவர்கள் திருத்தப்படாத அறிக்கையை வழங்கி உள்ளனர்.
2. SEBI (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெ ளிமீடு தேவைகள்) விதிகள் 2015ன் விதி 33ன் கீழ் பங்குச் சந்தையில் தாக்கல் செய்யப்பட்ட காலாண்டு நிதி முடிவுகளின் விரிவான வடிவத்தின் சுருக்கமாக மேற்கண்டவை உள்ளது. காலாண்டு முடிவுகளின் முழு வடிவம் பங்குச் சந்தை இணையதளத்திலும் (www.msei.in/index.aspx) நிறுவனத்தின் இணையதளத்திலும் (www.oswalminerals.com) கிடைக்கும்.

குழுவின் சார்பாக
ஒப்பம்/–
மோகன்லால் பரத் குமார் ஜெயின்
முழு நேர இயக்குனர்
DIN: 01252633

இடம்: பெங்களூர்
தேதி: 28 மே, 2022

SUNDARAM MUTUAL

Notice cum Addendum to Scheme Information Document, Key Information Memorandum and Statement of Additional Information of Sundaram Focused Fund

NOTICE is hereby given to all the unitholders of Sundaram Focused Fund that the Trustee of Sundaram Mutual Fund and the Board of Sundaram Asset Management Company Limited have, in terms of the enabling provisions of SEBI (Mutual Funds) Regulations, 1996 and circulars issued by SEBI thereunder, approved the change in asset allocation of Sundaram Focused Fund as provided hereunder effective from 30/06/2022 ("Effective Date"). Communication about the proposed changes has been sent to the address of the unitholders registered with our Mutual Fund.

Particulars	Existing	Proposed
Name of the Scheme	Sundaram Focused Fund (An open-ended equity scheme with a focus on investing in multi caps)	Sundaram Focused Fund (An open-ended equity scheme with a focus on investing across market capitalization)
Type of the Scheme	An open-ended equity scheme investing in a maximum of 30 Multi cap stocks.	An open-ended equity scheme investing in a maximum of 30 stocks across market capitalization
Investment Objective	The Investment Objective of the scheme would be to provide capital appreciation and /or dividend distribution by investing in companies across market capitalization	The Investment Objective of the scheme would be to provide capital appreciation and /or dividend distribution by investing in companies across market capitalization
Asset Allocation	Type of Instrument / % Allocation Equity & Equity related instruments* — 65-100% (Risk Profile: High) Debt (including Securitised debt**), Money Market instruments and Cash and Cash Equivalents — 0-35% (Risk Profile: Low to Medium) *Investment in maximum 30 stocks across market capitalization. ** Investment in Securitized Debt may be up to 35% of the net assets of the Scheme. The cumulative gross exposure through equity, debt and derivative positions (including commodity and fixed income derivatives) will not exceed 100% of the net assets of the scheme. The Asset Management Company (AMC) reserves the right to invest in Derivatives up to 50% of the net assets of the Scheme. The AMC further reserves the right to invest in foreign securities and derivatives subject to SEBI/RBI or any other Regulatory Authorities permitted from time to time. The scheme may invest upto 30% in foreign securities, ADR's and GDRs, subject to SEBI / RBI or any other Regulatory Authorities permitted from time to time. Subject to the SEBI Regulations, the Mutual Fund may deploy upto 20% of its total net assets of the Scheme in Stock Lending. The Scheme may invest upto 25% in stocks listed on SME platform of BSE and NSE. The Scheme does not seek to participate in repo/reverse repo in corporate debt securities. The Scheme does not seek to participate in credit default swaps	Type of Instrument / % Allocation Equity & Equity related instruments* — 65-100% (Risk Profile: Very High) Debt (including Securitised debt**), Money Market instruments and Cash and Cash Equivalents — 0-35% (Risk Profile: Low to Medium) Units issued by REITs/InvITs — 0-10% (Risk Profile: Very High) *Investment in maximum 30 stocks across market capitalization. ** Investment in Securitized Debt may be up to 20% of the net assets of the Scheme. The cumulative gross exposure through equity, debt, REITs/InvITs and derivative positions will not exceed 100% of the netassets of the scheme. The Asset Management Company (AMC) reserves the right to invest in Derivatives up to 50% of the equity assets of the scheme subject to guidelines and limits prescribed by SEBI from time to time. A Mutual fund may invest in the units of ReITs/InvITs subject to the following: a) No mutual fund under all its schemes shall own more than 10% of units issued by a single issuer of ReITs/InvITs; and b) A mutual fund scheme shall not invest - i) more than 10% of its NAV in the units of ReITs/InvITs; and ii) more than 5% of its NAV in the units of REITs/InvITs issued by a single issuer. The AMC further reserves the right to invest in foreign securities and derivatives subject to SEBI/RBI or any other Regulatory Authorities permitted from time to time. The scheme may invest upto 30% in foreign securities, ADR's and GDRs, subject to SEBI / RBI or any other Regulatory Authorities permitted from time to time. Subject to the SEBI Regulations, The scheme shall engage in securities lending subject a maximum of 20% and 5% for a single counter party. The Scheme may invest upto 25% in stocks listed on SME platform of BSE and NSE. The Scheme does not seek to participate in repo/reverse repo in corporate debt securities. The Scheme does not seek to participate in credit default swaps

Risk Factors Associated with Investments in REITs and InvITS:

Interest-Rate Risk: REITS/InvIts carry interest-rate risk, as investors may compare the yield on the REITs /InvIT to prevailing interest rates and the price of the REITs /InvIT may move in line with changing interest rates. Though it should be remembered that REITs /InvIT are not debt instruments and their price/value depends to a large extent on the underlying assets. Generally, when interest rates rise, prices of existing securities fall and when interest rates drop, such prices increase.

Risk of lower than expected distributions: The distributions by the REITs /InvIT will be based on the net cash flows available for distribution. The amount of cash available for distribution principally depends upon the amount of cash that the REITs /InvIT receives as dividends or the interest and principal payments from portfolio assets. The cash flows generated by portfolio assets from operations may fluctuate based on, among other things:

- success and economic viability of underlying projects - for e.g. real estate in the case of REITs and power projects in case of an INVIT whose undelying project is generation of power
- economic cycles and risks inherent in the business which may negatively impact valuations, returns and profitability of portfolio assets
- debt service requirements and other liabilities of the portfolio assets and fluctuations in the working capital needs
- ability of portfolio assets to borrow funds and access capital markets
- amount and timing of capital expenditures on portfolio assets

Liquidity Risk: This refers to the ease with which REITs /InvIT units can be sold. There is no assurance that an active secondary market will develop or be maintained. hence there would be time when trading in the units could be infrequent. The subsequent valuation of illiquid units may reflect a discount from the market price of comparable securities for which a liquid market exists.

Price-Risk: The valuation of the ReITs/InvITs units may fluctuate based on economic conditions, fluctuations in markets (eg. real estate) in which the ReITs/InvITs operates. As an indirect shareholder of portfolio assets, unit holders rights are subordinated to the rights of creditors, debt holders and other parties specified under Indian law in the event of insolvency or liquidation of any of the portfolio assets.

The above are some of the common risks associated with investments in ReITs/InvITs. There can be no assurance that a Scheme's investment objectives will be achieved, or that there will be no loss of capital. Investment results may vary substantially on a monthly, quarterly or annual basis.

Applicable Investment Limits in REIT and InvIT

a. At the Mutual Fund level:- Not more than 10% of units issued by a single issuer of REIT and InvIT;
b. At a single Mutual Fund scheme level: -
   i. not more than 10% of its NAV in the units of REIT and InvIT; and
   ii. not more than 5% of its NAV in the units of REIT and InvIT issued by a single issuer.

The limits mentioned in sub- clauses (i) and (ii) above will not be applicable for investments in case of index fund or sector or industry specific scheme pertaining to REIT and InvIT.

All other things remain unchanged and will continue as per the Scheme Information Document.

Purpose: Sundaram Focused Fund is an open-ended equity fund, focusing on 30 stock across multi cap stocks. By replacing the word multi cap to across market capitalization, the fund can be true to its mandate of investing across all types of market capitalization.

The change is only in the name and type of the fund. All other details would remain the same.

Since the proposed change is equivalent to change in the fundamental attributes of the Sundaram Focused Fund as per Regulation 18(15A) of the SEBI (Mutual Funds) Regulations, 1996, unitholders of the Scheme who are not in agreement with the proposed change are given an option to exit i.e. redeem their units or switch to other Schemes of Sundaram Mutual Fund available for subscription without payment of exit load between 31/05/2022 and 29/06/2022 (both days inclusive). Investors wishing to exit can submit redemption requests at any of the Official Point of Acceptance of Sundaram Mutual Fund and also through online on any business day during the exit period.

However, for investments made during the exit window period, there will be no waiver of exit load. The NAV applicable, should you choose to exercise the Exit Option would be based on the date/time of receipt of your application for exit during business hours on a business day. The Exit Option can be exercised from 31/05/2022 and 29/06/2022 (both days inclusive), by submitting the normal redemption request at the nearest Sundaram Mutual Investor Service Centre /RTA Branches or through various electronic modes such as Sundaram Mutual Fund website (www.sundarammutual.com) and other digital platforms; like Stock Exchanges, MFU, fintech portal, etc. For units held in dematerialized mode, the redemption request will have to be submitted to the respective Depository Participant. The Investors are requested to note that consent can also be sent to etrxn@sundarammutual.com. Further, the investors shall avail the services by written request in the email and send the same to the designated email ID of Sundaram Mutual Fund for processing. These documents shall only be accepted if they are in TIFF/PDF/JPG format and the size not exceeding 2MB. For transactions request through email, please refer addendum dated 24/04/2021 for more information.

The redemption requests received will be processed at NAV as on the date of receipt of request subject to applicable cut-off time. The redemption proceeds will be mailed /credited within 10 business days of receipt of valid redemption request. Unitholders may note that the offer to exit is merely an option and not compulsory. However, the exit option will not be available to those unitholders who have pledged their units and on which the Mutual Fund has marked a lien unless the release of pledge is obtained and communicated to the Mutual Fund / Registrar before applying for redemption.

Unitholders of the Scheme who have not opted to exit or switch-out on or before 29/06/2022 (applicable cut-off time.) shall be deemed to have consented to the proposed change.

The updated Scheme Information Document shall be made available with our Investor Service Centres (ISCs) and also displayed on the website www.sundarammutual.com after the completion of duration of exit option.

All other terms and conditions of the Scheme Information Document / Key Information Memorandum / Statement of Additional Information will remain unchanged.

This addendum forms an integral part of the Scheme Information Document (SID) / Key Information Memorandum (KIM) / Statement of Additional Information (SAI) of Sundaram Focused Fund as amended from time to time.

For **Sundaram Asset Management Company Ltd**
R Ajith Kumar
Secretary & Compliance Officer

Place: Chennai
Date: May 30, 2022

For more information please contact:
Sundaram Asset Management Company Ltd
(Investment Manager to Sundaram Mutual Fund)
CIN: U93090TN1996PLC034615

Corporate Office: 1st & 2nd Floor, Sundaram Towers, 46, Whites Road, Royapettah, Chennai-14.
Contact No. (India) 1860 425 7237, (NRI) +91 40 2345 2215
Fax: +91 44 2841 8108. www.sundarammutual.com

Regd. Office: No. 21, Patullos Road, Chennai 600 002.

HY1-22-23-13

Mutual Fund investments are subject to market risks, read all scheme related documents carefully.